**கவனிக்க.-** *07.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2015 - 2017 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2017.04.12**

*2015 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 734 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 735 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (1) இன் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவு) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (II) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) இன் கீழ் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரான தஸநாயக குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தஸநாயகவாகிய நான், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்டு அமைந்துள்ள கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மயானத்தில் இறந்தவர்களைப் புதைத்தல் அல்லது தகனம் செய்யும் வகையில் பொது மயானமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*தஸநாயக குணரத்ன பஸ்நாயக முதியன்சேலாகே தர்மசிறி தஸநாயக,*
*வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,*
*பொறியியலாளர் சேவை, நீதி மற்றும் சமாதானம், உள்ளூராட்சி*
*மற்றும் உள்ளூர் நிர்வாக பொருளாதார மேம்பாடு,*
*மின்சக்தி மற்றும் எரிசக்தி, சுற்றுச்சூழல், நீர்வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,*
*வடமேல் மாகாணம்.*

*முதலமைச்சு அலுவலகம்,*
*குருநாகல்,*
*2017, மாச்சு 01.*

### அட்டவணை

*குருநாகல் மாவட்டத்தின் தம்பதெனிய ஹத்பத்து பிரதேச வருமான அலுவலர் பிரிவின் உடுகஹகோரளை வடக்கு, கீழ் மெதகொட என்னும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அவரிடம் காணப்படும் இலக்கம் ஐ. 18/12.20 இனைக் கொண்ட களத்தாளின் இலக்கம் 232 இனைக் கொண்ட இறுதிக் கிராம திட்டவரைபின் காணித்துண்டின் இலக்கம் 16ஏ ஆகக் காட்டப்படுவதோடு, அதன் அளவாக இரண்டு (02) றூட் இருபத்தியொரு (21) பேர்ச்சஸ் (0ஏ.2றூ.21பே.) காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ள மேற்கில் டீ.பீ. 281971 மற்றும் டீ.பீ. 261329 ஏனைய அனைத்து திசைகளுக்கும் டீ.பீ. டீ. 23049 இனை எல்லையாகக் கொண்ட அலியா வெடிச்சஹேன என்னும் அரசாங்கக் காணி (இலக்கம் வீ. 2521 இனைக் கொண்ட வரைபுக் குறிப்பு) ............*

*4-434/1*

---

## வடமேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (1) இன் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவு) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (II) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பாக சபைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) பிரிவிற்கமைய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரான தஸநாயக*

குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தஸநாயகவாகிய நான், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்டு அமைந்துள்ள கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மயானத்தில் இறந்தவர்களைப் புதைத்தல் அல்லது தகனம் செய்யும் வகையில் பொது மயானமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

தஸநாயக குணரத்ன பஸ்நாயக முதியன்சேலாகே தர்மசிறி தஸநாயக,
வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
பொறியியலாளர் சேவை, நீதி மற்றும் சமாதானம், உள்ளூராட்சி
மற்றும் உள்ளூர் நிர்வாக பொருளாதார மேம்பாடு,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, சுற்றுச்சூழல், நீர்வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,
வடமேல் மாகாணம்.

முதலமைச்சு அலுவலகம்,
குருநாகல்.

**அட்டவணை**

வடமேல் மாகாண, குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச சபைப் பிரிவின் தம்பதெனிய ஹத்பத்துவின் உடுகஹ வடக்கு கோரளை வெலிகுபுர கிராம அலுவலர் பிரிவின் வெலிகுபுர கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. ஜே. வின்சன்ட் பெரேரா அவர்கள் 1956 ஆம் ஆண்டின் யூன் மாதம் 18 ஆந் திகதிய மற்றும் வரைபட இலக்கம் 1290 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் 2016, மாச்சு மாதம் 2 ஆந் திகதி உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. பீ. ஏ. என். குணசிறி அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 9043, வரைபடத்திற்கு ஏற்ப வடக்கே : திரு. ஆர். பீ. விமல் புஷ்பகுமாரவிற்கு உரித்துடைய காணி ; கிழக்கு மற்றும் தெற்கு : வீடுகளில் இருந்து நெடுஞ்சாலைக்குச் செல்லும் நாரம்மல பிரதேச சபை பாதை ; மேற்கிற்கு : திரு. டபிள்யூ. பீ. இந்திக பிரசங்கீத் தயாரத்ன மற்றும் இன்னும் பலர் உரிமை கோரும் காணிக்குரிய எல்லையாகவுள்ள 1றூட் 33.1 பேர்ச் விசாலமான பீல்லகந்த வத்த என்னும் காணி.

4-434/2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல்/ கட்டட வரைஞர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016

மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III மற்றும் அதன் பயிலுநர் தரம் ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுத் தகைமைகள்** : -
   - 1.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
   - 1.2 சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
   - 1.3 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர் 03 வருடங்களுக்கு மேல் மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவினைக் கொண்டிருப்பின் அது பற்றி கவனத்தில் கொள்ளப்படும்).

1.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

1.5 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.6 ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார்.

2. **கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள்** : - அனைத்து கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகளை 2017-05-15 ஆம் திகதிக்கு பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில்நுட்பத் தகைமைகள் |
|---|---|---|---|
| மத்திய மாகாண அரச சேவையின் தொழில் நுட்ப சேவையில் (சிவில்/ இயந்திர வியல்/ மின் னியல்/கட்டட வரைஞர்) தரம் III | சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. சாதாரண தரப் பரீட் சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த (உ.த.) பரீட்சை யில், துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் உள்ளடங் களாக கணிதம்/தொழில் நுட்பப் பாடத் துறைக் குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | *கவனத்திற்கு (சிவில்/ மின்னியல்/ இயந்திரவியல்/ கட்டட வரைஞர்) பதவிகளுக்கு விண்ணப்பிக்கையில் அப்பதவியுடன் தொடர்புடைய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>1. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத் தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.)<br>அல்லது<br>2. தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளிக்கும் அதிகார சபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>3. கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>4. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>5. இலங்கை பொறியியலாளர் நிறுவனத் தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாம் பகுதியினை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>6. கல்வி உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றி தழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக் களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று |

(தொடர்ச்சி)

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழிநுட்பத் தகைமைகள் |
|---|---|---|---|
| | | | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படும் வேறு ஏதேனும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| மத்திய மாகாண அரச சேவையின் தொழில் நுட்ப சேவையில் தொழில் நுட்ப (சிவில்/மின்னியல்/ இயந்திரவியல் / கட்டட வரைஞர்) பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சி யுடன்) | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட் சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட் சையில், துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக கணிதம்/ தொழில்நுட்பப் பாடத்துறைக்குறிய 03 பாடங்களில் ஒரே அமர் வில் சித்தியடைந்திருத் தல். (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | 1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், பதவியுடன் தொடர்புடைய துறை யொன்றில் பாடநெறியொன்றைச் சிறப் பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் (NCT) பெற்றிருத்தல். (உ+ம் : தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் சிவில்/மின்னியல்/இயந்திரவியல்)<br>அல்லது<br>2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் கட்டட வரைபுக் கலைத் தொடர்பான ஒரு வருட முழுநேரப் பாடநெறியினை சிறப்பாக பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>4. கல்வி உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ் களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமை களுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்படும் வேறு ஏதேனும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |

**3. சம்பள அளவுத்திட்டம் :**

3.1 பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் MN3-2006 சம்பளத் தொகுதிக்கமைய மத்திய மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III இற்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.

ரூ. 31,040 - 10×445- 11× 660- 10× 730- 10× 750- ரூபா 57,500 ஆகும் (MN3-2006 சம்பளத் தொகுதி)

பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

பயிலுநர் தரத்திற்கான கொடுப்பனவு :- பொ.நி.சுற்று நிருபம் 03/2016 இன் அட்டவணை V-19 இற்கமைய

முதலாவது வருடம் : ரூ. 18,728

**4. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்.-** மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப்பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்

**5. ஆட்சேர்ப்பு முறை.-** மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுள் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு பின்னர் பொது நிருவாக சுற்று நிருபம் 15/90 இற்கமைய மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

**6. சேவை நிபந்தனைகள் :**

6.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்

6.2 அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்

6.3 இந்நியமனப் பதவியில் குறைந்தது 5 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக்கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**7. விண்ணப்பிக்கும் முறை :**

7.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான 600 ரூபாவை மத்திய மாகாண சபை பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

7.2 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2017-05-15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில்"மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016" எனக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் பதிவு மாவட்டம், பதவிக்குறிய குறியீட்டு இலக்கம் என்பவற்றையும் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

7.3 ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

*8. **பரீட்சை ஊடகம்.**-இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*9. **பரீட்சை நிலையம்.**- பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.*

*10. **பரீட்சை செயற்றிட்டம்** .- இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் பின்வரும் பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.*

(i) *நுண்ணறிவும் பொது உளச்சார்பும் .- (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்)*
*இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.*

(ii) *தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் .- காலம் : 03 மணித்தியாலம் (100 புள்ளிகள்)*
*துறை சார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்.*

*(அ) மத்திய மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம்* III/*பயிலுநர் தரம்*
*இங்கு சிவில் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, நீர் வழங்கல் மற்றும் வடிகால் முறை சம்பந்தமான வினாக்களைக் கொண்டது.*

*(ஆ) மத்திய மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) தரம்* III
*இயந்திரவியல் உத்தியோகத்தர் கொண்டிருக்க வேண்டிய அறிவினை மதிப்பிடும் வகையில் அமைந்துள்ள இக்கேள்விப்பத்திரத்திற்கு இயந்திரவியல் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே விடையளித்தல் வேண்டும்.*

*(இ) மத்திய மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) தரம்* III
*மின்னியல் சம்பந்தமான பரீட்சார்த்தியின் அறிவினை மதிப்பிடும் கேள்விப்பத்திரமாகும். மின்னியல் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே இப்பகுதிக்கு விடையளித்தல் வேண்டும்.*

*(ஈ) மத்திய மாகாண அரச சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டட வரைஞர்) தரம்* III
*கட்டட வரைஞர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அறிவினை மதிப்பிடும் கேள்விப்பத்திரமாகும். கட்டட வரைஞர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே இப்பகுதிக்கு விடையளித்தல் வேண்டும்.*

*11. **விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்.**- இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும் போது கீழ் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இடவேண்டும்.*

*11.1 விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிடவேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு*

| | | |
|---|---|---|
| *கண்டி* | - | *01* |
| *மாத்தளை* | - | *02* |
| *நுவரெலியா* | - | *03* |

*11.1.1 மத்திய மாகாண இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் ஒவ்வொரு பதவிகளுக்கு ஒதுக்கியுள்ள குறியீட்டு எண்கள்*

| | | |
|---|---|---|
| *தரம்* III/*பயிலுநர் தரம்* | *சிவில்* | : *01* - C |
| | *இயந்திரவியல்* | : *01* - M |
| | *மின்னியல்* | : *01* - E |
| | *கட்டட வரைஞர்* | : *01* - D |

*11.2* விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

*11.3* நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

*11.4* தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

*12.* இப்பரீட்சையை நடத்துதல், நடத்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016**

பரீட்சை இலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ] (சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும்)

பதவி [ ] பதவிக்குரிய குறியீட்டு இல. [ ]

வதிவிட மாவட்டம் [ ] மாவட்டத்திற்குரிய குறியீட்டு இல. [ ]

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(Mr./Mrs./Miss) (ஆங்கில பெரிய எழுத்தில்)
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.3 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
(ஆங்கிலக் பெரிய எழுத்தில்)
1.4 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.2 அனுமதிபத்திர அட்டை அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.3 அனுமதிபத்திர அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
2.4 தற்போது அரச சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி :-----.
2.5 தொலைபேசி இலக்கம் :-----.

03. 3.1 பிறந்த திகதி :-----.
3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2017-05-15) வயது :
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

04. பால் (ஆண், பெண்) :-----.

05. 5.1 நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் : -

6.1. க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் :
பரீட்சை ஆண்டு :-----. சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | |
| கணிதம் | |
| விஞ்ஞானம் | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.2. க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் :
பரீட்சை ஆண்டு :-----. சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

07. தொழில்சார் தகைமைகள்

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள் | கால வரையறை | பெற்றுள்ள சித்திகள் | சான்றிதழ் திகதியும் இலக்கமும் |
|---|---|---|---|---|
| | | | | |

08. ஏனைய தகைமைகள் :-----.

09. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.
(ii) திகதி :-----.
(iii) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

பரீட்சார்த்தியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் உறுதி கூறுகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானதென தெரியவரின் நியமனத்திற்கு முன்னராயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்திற்கு பின்னராயின் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி:-----.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

திகதி :-----.

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*10. அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக பின்வரும் சான்றிதழைத் திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும்.*

*இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ....................................... என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ..................................... ஆக கடமையாற்றுகிறார். கடந்த வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.*

------,
*திணைக்களம்/நிறுவனத்தலைவரின் கையொப்பம்*
*(உத்தியோகபூர்வ முத்திரை)*

*திகதி :-----.*

*4-351*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*